# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,288 — 1922 ம் ஸ்ரு ஐப்பசிமீ 13 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1892 ம் ஆண்டின் சிறுப்பட்டணங்களின் சுகாதார ஒழுங்குக் கட்டளைச்சட்டம்.

1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 32 (2) ம் பிரிவின்கீழ் கேகாலை டிஸ்திறிக் சுகாதார சங்கத்தால் இயற்றுப்பட்டு அதிகார மந்திராலோசனை சபையோடுகூடிய அதியுத்தம தேசாதிபதி யவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, இதன்பின்னுல்வரும் உபவிதிகள், சனங்களுடைய அறிவித்தலுக்காக இத்தால் பிரசரிக்கப்படுகின்றது.

அதியுத்தம தேசாதிபதி யவர்களின் ஆஞ்ஞைப்படி,

இராசமா லிகிதரின் கந்தோர்,<br>
கொழும்பு, 1922 ம் ஆண்டு அற்பசிமீ 9 ந் உ.

பி. ஹோஸ்பரோ,<br>
பிரதி அரசாங்க லிகிதர்.

XVI. ம் படலம். தலைவரிப்பணம்.

32 (2) ம் பிரிவின் உபவிதிகள்.

1. பதினெட்டு வயதுக்கும் ஐம்பத்தைந்து வயதுக்கு மிடையிலுள்ள ஒவ்வொரு ஆணும் பட்டணத்தின் பெருவீதிகளில் அல்லது அதன் அமைப்பு, திருத்தம் அல்லது அதை நன்னிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேள்வையான வேலைகளைச் செய்வதற்கு, அல்லது அதன் எம்முகாந்திரத்துக்காயினும் தேள்வையான சாமான்களை ஆயித்தப்படுத்துவதற்குஞ் சேர்க்கிறதற்கும், ஒவ்வொரு வருஷமும், ஆறு நாட்களில் இடைவிடாது ஊழியஞ் செய்கிறதற்குப் பாத்தியப்பட்டவராயிருப்பர்.

2. இதன்பின்னுல் சொல்லப்படுபவர்கள், முன்னே சொல்லப்பட்ட பிரமாணத்தின்படி ஊழியஞ்செய்யும் உத்தரவாதத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

(*a*) 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 50 ம் பிரிவின்கீழும் 1910 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 26 (5) ம் பிரிவின்கீழும், ஊழியஞ்செய்வதிலிருந்து விலக்கப்பட்ட ஆட்கள்.

(*b*) மனதில் அல்லது சரீரத்திற் பீடிக்கப்பெற்ரே அல்லது வேறு மற்றுங் காரணங்களால், சங்கத்தாருடைய எண்ணப்படி வேலைசெய்ய இயலாதவர்களெனக் கணிக்கப்பட்ட அம்மனிதர்கள்.

3. ஊழியத்துக்கு ஆழாக விருக்கும் ஒவ்வொருவரும் பங்குனி மாத முடிவுக்குமுன் காசாக இரண்டு ரூபாய் (2/— ரூபா) கொடுத்து தண்டனையை நிவிர்த்திசெய்வது முறையாகும்.

4. அக்கிராசனவர்கள் குறித்த திகதிக்குமுன், ஊழியஞ்செய்வதற்கு அல்லது அதை நிவிர்த்திசெய்வதற்கு அறிவித்தல் கொடுத்தபின், அப்படிச்செய்யத்தவறிய ஒவ்வொருவரும், பன்னிரண்டு நாள் ஊழியத்துக்கு அல்லது அத்தண்டனையை நிவிர்த்திசெய்வதற்கு இருபங்கு பணம் (ரூபா 4/—) இறுப்பதற்கு ஆழாகிருர். வரிகொடுக்கத் தவறியவர்கள், இச்சங்கத்தின் தலைவருக்கு 33 ம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட தத்துவத்தின்படி அத்தலைவரால் தண்டிக்கப்படுவார்கள்.

5. சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட இறைதிரட்டு மதிகாரி அல்லது அதிகாரிகளால் வரிதிரட்டப்படும்.

6. வேலைசெய்வதற்கு அல்லது பணங் கொடுப்பதற்காயுள்ள அறிவித்தல்கள் யாவும் எழுத்துமூலமாக அல்லது பறை அறைந்து செய்யப்பட வேண்டும்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வுறுற்கில்லில் உடைவுக்கு றேயில்வே டிப்பார்ப்மென்ருரால் செய்யப்பட்ட திருத்தங்களுக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,360. குறிச்சி—கற்றன்.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | | உரித்தாளியின்பெயர். | | | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | வுறுற்கில்தோட்டம் | .. | தேயிலை | .. | வுறுற்கில் தோட்டத்தின் சொந்தக்காறர் | | .. | 0 | 0 | 9·90 |
| 10 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 16·95 |
| 11 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 26·50 |
| 12 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 11·50 |
| 13 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 6·62 |
| 14 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 6·37 |
| 15 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 5·50 |
| 16 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 2·50 |
| 17 | ஷை | .. | ஷை | .. | ஷை | .. | .. | 0 | 0 | 8·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ௵ நவம்பர்மாதம் 6 ந் தேதியிலன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ ஒக்டோபர்௴ 13 ௳.

டபிள்யு. எல். கின்டேர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு, ம. மா.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரதான றெயில்வே பாதை இரட்டித்தலைக் கட்டுதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

474 ம் இலக்க கடைசி கிராமப்படத்துக்குத் தொடர்ச்சி. கிராமம்—தம்பதேனிகற்பற்றின் உடுக்காகோறளை தெற்கிலிருக்கும் பகலபுஸ்ஸமுவா.

| துண்டு. | காணியின் பெயர். | | விபரம். | | உரித்தாளியின் பெயர். | | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2E | மில்லகாகமுலவத்தை | .. | தென்னந்தோட்டம் | | சுடுகாகுறுதேவாகே மார்தெலிஸ் பேர்ணண்டோவும் பகல்புஸ்ஸமுவாவிலிருக்கும் கே. டீ. அன்டினிசா | | 0 | 2 | 39 |
| 3D | புஹுகாகமுலவத்தை | .. | ஷை | .. | பகலபுஸ்ஸமுவாவிலிருக்கும் உவிஜசிங்கதேவகே அமாரிஸ் கன்கனம | | 0 | 0 | 35 |
| 3C1 | ககற்றகாகமுலவத்தை | .. | ஷை | .. | பகலபுஸ்ஸமுவாவிலிருக்கும் கறஞ்சிதேவகே தெப்பனீசா | | 2 | 0 | 11 |
| 9B | ஷை | .. | ஷை | .. | ஷை ஷை | .. | 0 | 1 | 22 |
| 13A | பகலகடேகும்புற | .. | நெல்வயல் | .. | ஷை கே. டீ. அபாற | .. | 0 | 0 | 16 |
| 13B | பனிவிகொடகும்புற | .. | ஷை | .. | ஷை (1) பபானீசாவும், (2) எல். பீ. றன்மெனிக்காவும் | | 0 | 0 | 9 |
| | 475 ம் இலக்க கடைசிக் கிராமப்படத்துக்குத் தொடர்ச்சி. கிராமம்—கெந்தகேன. | | | | | | | | |
| 6A | அன்னசிவத்தை | .. | தென்னந்தோட்டம் | | பத்தாலகெதறவிலிருக்கும் கே. டீ. பெறேறு | .. | 0 | 1 | 27 |
| 8B1 | கலுனேவெலியகாகமுலவத்தை | | வெறுநிலம் | .. | யற்றலகொடையிலிருக்கும் (1) பீ. பொடினேனவும், (2) சாதிறிஸ்உம் | | 0 | 0 | 7 |
| 10A | ஷை | .. | ஷை | .. | ஷை ஷை | .. | 0 | 0 | 1 |
| 10B | அன்னசிவத்தை | .. | ஷை | .. | பத்தலகெதரவிலிருக்கும் கே. டீ. பெரேரா | .. | 0 | 0 | 0·5 |
| | 477 ம் இலக்க கடைசிக் கிராமப்படத்துக்குத் தொடர்ச்சி. கிராமம்—வோவலை. | | | | | | | | |
| 26 | கும்புகுனுல்லா | .. | நெல்வயல் | .. | வோவலையிலிருக்கும் (1) உங்குருளையும், (2) பொடிசிங்கோவும் | | 0 | 2 | 27 |
| 26A | அசுவேதுமா | .. | ஷை | .. | வோவலையிலிருக்கும் (1) பற்றியன்கெலாக்கே கிரிகாமியும், (2) கிரிவண்டாவும், (3) அப்புகாமியும், (4) முதலிகாமியும், (5) சிவதரகாமியும் விஸ்ஸகாமியும் | | 0 | 0 | 34 |
| 27A | மில்லகாகாமுல்வத்தை | .. | தென்னந்தோட்டம் | | சேர். எஸ். சீ. ஒவேயசேகர | .. | 2 | 2 | 25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1922 ம் ௵ நவம்பர்மாதம் 7 ந் தேதியிலன்று மத்தியானம் 12 மணிக்கு பொல்காவலை இளைப்பாறு மண்டபத்தில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1922 ம் ௵ ஒக்டோபர்௴ 3 ௳.

எவ். ஜி. ரிறல்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்து.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பி லிருந்து திரிகோணமலைக் குப்போகும் பாரமில்லா றெயில்வே கட்டுதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

1,864 ம் இலக்க துண்டுஅளவை பிரதமபடத்தின் 1 ம் இலக்க எக்ஸ்ரிருக்ற். கிராமம்—கிரியலகற்பற்றில் திவிகந்த காயெ கோறளையில் கற்றிகமுவா. விபரம்—நெல்வயல்.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | மகாவலபகலபோடுவா | .. | கற்றிகமுவாவி லிருக்கும் புத்தகோயில் குருக்கள் தம்மஜோதி உன்னன்சே, நம்பிக்கைக்காரன் கற்றிகமுவாவின் பளைய விதானை யாகிய முதியான்சே | 0 2 2·1 |

1,865 ம் இலக்க துண்டுஅளவை பிரதமபடத்தின் 1 ம் இலக்க எக்ஸ்ரிருக்ற். கிராமம்—நிக்கவகம்பக கோறளையில் பகலகெலே. விவரம்—நெல்வயல்.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 32 | புருனவெல | .. | கந்துவோடகமவிலிருக்கும் (1) கே. எம். அப்புகாமி விதானையும், (2) றன்மெனிக்காவும், (3) கே. புஞ்சிருளையும் | 0 0 24·1 |
| 33 | ஷை | .. | பகலகெலேயிலிருக்கும் கே. எம். அப்புகாமி வெதருளை முதியான்சே | 0 1 4·6 |
| 34 | ஷை | .. | றங்கமவில் காலஞ்சென்ற வண்டா கோருளையின் கைம்பெண் றன்மெனிக்காவும், (2) கந்துவொடகமவில் அப்புகாமியும் | 0 1 14·8 |
| 35 | ஷை | .. | ஷை .. .. .. | 0 2 11·2 |
| 36 | ஷை | .. | கந்துவொடகமவி லிருக்கும் (1) அப்புகாமி வெல்விதானையும், (2) றன்மெனிக்காவும், (3) புஞ்சிருளையும் | 0 1 9·7 |
| 37 | ஷை | .. | கந்துவொடகமவி லிருக்கும் கே. எம். அப்புகாமி .. | 0 0 12·4 |
| 39 | வக்மிகாகும்புற | .. | அம்பகஸ்வீவாவி லிருக்கும் (1) எம். அப்புகாமி வெல்விதானையும், (2) றன்காமி கன்ஆராச்சியும், (3) ஏ. எஸ். றன்காமியும், (4) பகலகெலவின் கே. எம். கப்புருகாமி விதானையும் | 0 1 4·7 |

1,869 ம் இலக்க துண்டுஅளவை பிரதமபடத்தின் 1 ம் இலக்க எக்ஸ்ரிருக்ற். கிராம—றன்முக்கம. விவரம்—நெல்வயல்.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 14 | றனமுக்கமவெல | .. | நிக்கவீவாவி லிருக்கும் (1) அப்புகாமி விதானையின் கைம்பெண் கிரிமெனிக்காவும், (2) முதியான்சேயும், (3) உக்குவண்டாவும், (4) றன்காமியும், (5) கொத்கமவி லிருக்கும் றன்மெனிக்காவின் சிறுபிள்ளைகளுக்காக முத்துமெனிக்காவும் | 0 0 5·7 |
| 17 | ஷை | .. | ஷை .. .. .. | 2 0 34·8 |

1,870 ம் இல்க்க துண்டுஅளவை பிரதமபடத்தின் 1 ம் இலக்க எக்ஸ்ரிருக்ற். கிராமம்—கிரியலகற்பற்றின் நிக்கவ கம்பக கோறளையின் வல்பலவுவா. விவரம்—சேனை.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 7 | கந்தபெளல்கென | .. | மகாதேவாலேயின் வஸ்னுயக்க நிலமை ஜே. ஸீ. றற்வத்தை .. | 0 1 35·8 |
| | | | விவரம்—சேனையும், 20 வயதுள்ள ஒரு கிளட்டுத் தென்னமரமுண்டு | |
| 8 | எலகாவேகேன, கந்தபௌல கேன, பித்தபனேகேன, கோங்ககமுலகேன | | மகாதேவாலேயின் வஸ்னுயக்க நிலமை ஜே. ஸீ. றற்வத்தை .. | 19 1 17·4 |
| | | | விவரம்—நெல்வயல். | |
| 9 | வல்பலவுவவேலா | .. | மகாதேவாலேயின் வஸ்னுயக்கனிலமே ஜே. ஸீ. றத்வத்தை .. | 0 1 8·8 |
| | | | விவரம்—குளமும் கட்டும். | |
| 10 | மகாவேவா | .. | மகாதேவாலேயின் வஸ்னுயக்கனிலமே ஜே. ஸீ. றத்வத்தை .. | 0 1 32·2 |
| | | | விவரம்—நெல்வயல். | |
| 11 | வல்பலவுவவேலா | .. | மகாதேவாலேயின் வஸ்னுயக்கனிலமே ஜே. ஸீ. றத்வத்தை .. | 0 2 32·5 |
| | | | விவரம்—வெறுநிலம். | |
| 12 | சியம்பலகாகமுலகால | | மகாதேவாலேயின் வஸ்னுயக்கனிலமே ஜே. ஸீ. றத்வத்தை | 0 0 21·8 |
| | | | விவரம்—குளமும் கட்டும். | |
| 13 | வல்பலவுவவேவா | .. | மகாதேவாலேயின் வஸ்னுயக்கனிலமே ஜே. ஸீ. றத்வத்தை .. | 1 2 26·8 |

1,872 ம் இலக்க துண்டுஅளவை பிரதமபடம் இலக்கம் 1. முன்துண்டு. கிராமம்—திவுறுங்கம். விவரம்—சேனை.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 3 | கதுறுக்காககேன | .. | டெல்வித்த வளவுவவி லிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 1 3·8 |
| 4 | கதுரகாககேன், திம்பிரிகாக கேன, முதலிய | | கண்டிக் கோயிலின் நம்பிக்கைக்காரர் .. .. | 7 2 15·3 |
| | | | விவரம்—நெல்வயல். | |
| 7 | திம்பிரிகாககும்புற | .. | கண்டிக் கோயிலின் நம்பிக்கைக்காரர் .. .. | 1 1 23·8 |
| | | | விவரம்—சேனை. | |
| 8 | கொங்காகமுலகேன | .. | கண்டிக் கோயிலின் நம்பிக்கைக்காரர் .. .. | 0 2 4·8 |

1,875 ம் இலக்க துண்டுஅளவை பிரதமபடம் 1 ம் இலக்க முன்துண்டு. கிராமம்—மொறகல்லகம்ம.

விவரம்—நெல்வயல்.

| துண்டு. | காணியினது பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 37 | கொன்கும்புற | .. | என். எம். ரிக்கிறவண்டாவும், (2) முதியான்சேயும் .. | 1 0 18·2 |
| 38 | அலிகொடல்லகும்புற | .. | டெல்வித்தை வளவுவவி லிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 3 4·1 |
| 39 | பகலகும்புற | .. | மப்பேகமுவாவி லிருக்கும் வண்டா விதானகே கூமா .. | 0 0 35·8 |
| 40 | மகாகும்புற | .. | டெல்வித்தை வளவுவயிலிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 0 39·6 |
| 41 | கும்புகாககும்புரு | .. | மாப்பே கமுவாவிலிருக்கும் அப்புகாமிக்கே டிங்கிரி மெனிக்கா .. | 0 0 14 |
| 42 | ஷை | .. | ஷை ஷை கிரி மெனிக்கா .. | 0 0 13·6 |
| 43 | ஷை | .. | டெல்வித்தை வளவுவவிலிருக்கும் பீ. வீ. டெல்வித்தை | 0 1 13 |
| 44 | மீகாககும்புரு | .. | மாப்பே கமுவாவிலிருக்கும் சிறிமல்காமி விதானலக்கே நீலம்மா புஞ்சிவண்டாவும் | 0 0 29·8 |
| 45 | ஷை | .. | ஷை .. .. | 0 0 16·2 |
| 46 | விந்தகும்புரு | .. | மாப்பெகமுவாவிலிருக்கும் கிரிகாமிக்கே றங்காமி .. | 0 0 30·8 |
| 47 | ஷை | .. | அப்புகாமிக்கெ கொத்காமியும் ரிக்கிறிமெனிக்காவும் .. | 0 0 36·7 |
| 48 | பம்புறுகாக கும்புரு | .. | டெல்வித்தை வளவுவவிலிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 1 12·5 |

| துண்டு | காணியின் பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 49 | நிக்ககாகும்புரு | .. | நிக்கவீவாவிலிருக்கும் ஆராச்சில்லாக்கெ சுடகாமியும் கலுவண்டாவும் | 0 1 6 |
| 50 | ஷை | .. | மாப்பே கமுவாவிலிருக்கும் டிங்கிரிவண்டா விதானையும் அப்புகாமி பழைய ஆராச்சியும் | 0 1 4·7 |
| 51 | ஷை | .. | சியம்பலேவாவிலிருக்கும் (1) ஏ. புஞ்சிருளையும், (2) யூ. றங்காமியும், (3) யூ. கலுவண்டாவும் | 0 0 31·1 |
| 52 | ஷை | .. | ஆர். வீ. ரிக்கிரி அப்புகாமி, பழைய ஆராச்சி .. .. | 0 0 28·6 |
| 53 | மீகாகும்புரு | .. | டெல்வித்தை வளவுவவிலிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 0 36·6 |
| 54 | வோகாகும்புரு | .. | பொகொறவத்தையிலிருக்கும் வன்னிகாமி ஆராச்சி .. | 0 0 38·6 |
| 55 | கமற்றகாகும்புரு | .. | நிக்கவீவாவிருக்கும் கலுவண்டா .. .. | 0 0 34·7 |
| 56 | மகாகும்புரு | .. | டெல்வித்தை வளவுவவிலிருக்கும் பீ. வீ. டெல்வித்தை .. | 0 2 6·2 |
| 57 | இகலகும்புரு | .. | மாப்பேகமுவாவிலிருக்கும் (1) கெ. கலுவண்டாவும், (2) ஏ. கெரத்காமியும், (3) டிங்கிரிவண்டா விதானையும் | 0 0 33·2 |

1,878 ம் இலக்க துண்டு அளவைப் பிரதமபடத்தின் 1 ம் இலக்க மூன்துண்டு. கிராமம்—பொத்தானு.
விவரம்—நெல்வயல்.

| துண்டு | காணியின் பெயர். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 35 | தம்பகாகாகும்புரு | .. | டபிள்யு. ஏ. கெத்தியா .. .. .. | 0 0 24·2 |
| 36 | நிக்ககாகும்புரு | .. | புல்கேவாவிலிருக்கும் (1) எம். புஞ்சியும், (2) பிலிப்புவாவும் .. | 0 0 10·7 |
| 37 | ஷை | .. | டபிள்யு. ஏ. குமாரவெல் விதானை .. .. | 0 0 18 |
| 38 | ஷை | .. | டபிள்யு. ஏ. செல்ல விதானை .. .. | 0 1 15·3 |
| 39 | ஷை | .. | புல்கெவாவிலிருக்கும் (1) டபிள்யு. ஏ. பிலிப்புவாவும், (2) கெ. ஏ. டிங்கிரி அப்புவாவும் | 0 1 10·1 |
| 40 | சியம்பலகாகும்புரு | .. | மீகாகவீவாவிலிருக்கும் (1) டபிள்யு. ஏ. கிரிகாமியும், (2) வாண்டியாவும், (3) எம். புஞ்சாவும் | 0 2 3·6 |
| 41 | ஏகெலகாகும்புரு | .. | அனுராசபுர டிஸ்திறிக்கில் உவம்புத்துவீவாவிலிருக்கும் (1) டபிள். ஏ. கப்புவாவும், (2) வாண்டியாவும், (3) எம். பலாத்தும் | 0 0 25·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வெண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஸ்ரீ நவம்பர் மாசம் 15 ௳ தேதியிலன்று காலே 9 மணிக்கு பொல்பிற்றிக்கம இளைப்பாறு மண்டபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1922 ம் ஸ்ரீ ஒக்டோபர்மீ 3 ௳.

எவ். ஜீ ஹிரல்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 8,195, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1922 ம் ஸ்ரீ (ஒக்டோபர்) ஐப்பசிமீ 13 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக கச்சேரியில் கொழும்பு டிஸ்திறிக்கு உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகட்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்றர்,
கொழும்பு டிஸ்திறிக் உப உதவி அரசாட்சி ஏசன்று.

கவனிப்பு—மேற்சொல்லிய காணிகளுக்கூடாக விருக்கும் வழிப்பாதை உரித்து காணியிலுள்ள சோந்தைக்குரித்து.

குறித்த காணியின் விபரம்.

மேல் மாகாணம், கொழும்பு டிஸ்திறிக் அலுற்குறு கோறளை தெற்கு, ருகம்பற்று, புலுககொட கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

பிரதமபட இலக்கம் 16,075.

| துண்டு. | | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | .. | கொட்டஅலுவா .. .. .. .. | 1 0 34 |
| 2 | .. | டெல்ககலந்த .. .. .. .. | 0 0 17 |
| 3 | .. | ஷை (ருேட்டுக்காக சேமிக்கப்பட்டது) .. .. .. | 0 1 3 |
| | | | 1 2 14 |

எல்லைகளாவன: வடக்கு-ரி. மறத்தேலிஸ் பெர்னன்டோவாலும் மற்றவர்களினுலும் உருத்தாடப்பட்ட அம்பககவத்தவும், 149,180 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலமும்; கிழக்கு-ரி. மறத்தேலிஸ் பெர்னன்டோவாலும் மற்றவர்களினுலும் உருத்தாடப்பட்ட அம்பககவத்த; தெற்கு-கந்தானையிலிருந்து கனேமுல்லைக்கு போகும் ருேட்டு; மேற்கு-பொலவத்த கிராமத்தின் எல்லைகள்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1907 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 8,196, மாத்தளை.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனஉரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1922 ம் ஞு (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 13 ௳ தேதி துவக்கம் மூன்றுமாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். சி. ரொல்லர்துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணி முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். சி. ரொல்லர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணியின் விபரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் மாத்தளை கிழக்குப்பகுதியைச்சேர்ந்த பல்லேசியப்பற்றில் போதிக்கொட்டுவெயென்னுங் கிராமத்திலுள்ள இத்துடன் அணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தப்படியே 6,989 ம் பிரதமப்படத்திலே 8C ஆங் காணித்துண்டாய்க் காட்டப்பட்டு 3 ரூட் 20·6 பேட்சு விசாலங்கொண்டதும் பொதுவாக வானு, ருனு தோட்டம் என்னும் பெயரினுல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்படுவதுமான காணித்துண்டு. இதற் கெல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய மில்லக்காகாவகேன அல்லது திங்கொல்வெலப்பிற்றிய; கிழக்கு-பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனச் சாதிக்கப்படும் வானு, ருனு தோட்டம் (ரேருட்டுச்சேமிப்பு); தெற்கு-மலஎல; மேற்கு-முடிக்குரிய மில்லக்காகாவகேன அல்லது திங்கொல்வெலப்பிற்றிய.

* இங்கிலீசின் மூன்ரும் பாகம் 1907 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[மாத்தளை வி. உ. 7—1922.]

---

[அறிவித்தல் இல. 8,197, கேகாலை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்ணிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானுல் அவர்கள், 1922 ம் ஞு ஒக்டோபர் (ஐப்பசி)மீ 13 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலைக் கச்சேரியில் கேகாலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசன்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜீ. எஸ். வூட்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

குறிப்பு—சொல்லப்பட்ட காணியின் வழியுரித்து உடந்தை உரித்துக்குச்சரி.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

சப்பிரகமுவா மாகாணம் கேகாலை டிஸ்திறிக் கல்பொடைக் கோறளைப்பகுதி எகொடைபோத்த பற்று உடுவவலைக் கிராமத்திலிருக்கும் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் அக்ஷரத்தில்* விபரிக்கப்பட்டிருக்கும் இதன்பின்னுல் காணும் துண்டு:—

பிரதமபட இல. 2,776.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 5 .. | பிற்றக்கந்தைமூக்கிளானை அல்லது வெலிக்கந்தைமூக்கிளானை (கன்சபாவப்பாதைக்கு விடப்பட்ட நிலம்) .. .. .. .. | 0 0 29 |

எல்லைகளாவன: வடக்கு-பாணகமுவ என்னுங் கிராம எல்லை; கிழக்கும் மேற்கும்-மேஸ்தர் அலக்சான்டர் கிறேப் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் (பிரதம படம் 2,776/6) விற்கப்பட்ட பிற்றக்கந்தைமூக்கிளானை அல்லது வெலிக்கந்தைமூக்கிளானை; தெற்கு-மெஸ்தர் மொலிக்கொடைக்கும் வேறொருவருக்கு முரிய கறங்காவகேனையும் பீ. கேமபாலருக்குரிய தொடன்காகஎலகேனவத்தையும்.

* இங்கிலீசின் மூன்ரும் பாகம் 1908 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 8,198, கேகாலை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானுல், அவர்கள் 1922 ம் ஞு (ஒக்ரூபர்) ஐப்பசிமீ 13 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலை கச்சேரியில் கேகாலை டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜி. எஸ். வூட்மன்,
உதவி அரசாட்சி ஏசன்று.

குறிப்பு.—சொல்லப்பட்ட காணி அல்லது காணிகளின் வழி உரித்து உடந்தை உரித்துக்குச்சரி.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

சப்பிரகாம மாகாணம் கேகாலே டிஸ்திறிக் கல்பொடக்கோறளைப் பகுதி எகொடப்போத்தப்பற்று பாணகமுவ என்னுங் கிராமத்தில் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் அக்ஷரத்தில்* விவரிக்கப்பட்டிருக்கும் இதன்பின்னுல் காணும் துண்டு:—

பிரதமபடம் 2,776 ம் இலக்கம்.

| துண்டு. | காணிப் பெயர். | விசாலம், ஏ. று ப. |
|---|---|---|
| 1 .. | பிற்றகந்தை மூக்கலானே அல்லது வெளிக்கந்தை மூக்கலானே (கன்சபாவப்பாதைக்குச் சேமிக்கப்பட் நிலம்) | 0 0 18 |
| 4 .. | ஷை .. .. .. ( ஷை ) | 0 0 24 |
| | | 0 1 2 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்காக விடப்பட்ட நிலம்; கதிரவேலு இரத்தின சிங்கம் அவர்களுக்கு (பிரதமபடம் 2,776) 2 ம் இலக்கம்) விற்கப்பட்ட பிற்றக்கந்தை மூக்கிளானே அல்லது வெளிக்கந்தை மூக்கிளானேயும்; (பிரதமபடம் 2,192/680 ம் இலக்கம்) மாகம்னேமூக்கிளானேயும்; தெற்கு-உடுவவெலே என்னுங் கிராம எல்லே; மேற்கு-(பிரதமபடம் 2,776/3 ம் இலக்க) அலெக்சான்டர் கிறேப் அவர்களுக்கும் மறுபேருக்கும் விற்கப்பட்ட பிற்றக்கந்தை மூக்கிளானே அல்லது வெளிக்கந்தைமூக்கிளானேயும் கன்சபாவா றேட்டும்.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1909 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

## கேளவிப்பத்திரகங்களைப்பற்றிய அறிவித்தல்.

1923 ம் ஞு தையாதம் 1 ந் தேதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ந் தேதிவரைக்கும் நிலாவெளி :—

(a) உப்புக் குதங்களிலிருந்தும்.
(b) உப்பள மேடைகளிலிருந்தும்.
(c) உப்புக்குத மேடைகளிலிருந்தும்.

1. திருக்கோணமலே பழைய உப்புக் குதங்களுக்கு அதாவது—காட்டுப் பகுதித்தலம், பகிரங்கவேலைக் கட்டிட அடைப்பு, ரேகுத்தரை என்னும் இடங்களுள் அமைக்கப்பட்டுள்ள குதங்களுக்கும்; (2) பீரங்கியடிக் குதங்களுக்கும் உப்பு ஏற்றிவந்து சேர்ப்பதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றது.

2. (a) வகையில் ஒப்பந்தக்காரர் உப்பை நிறுத்து ஏற்றுக்கொள்வர் (b) (c) வகைகளில் செய்கைக்காரர் உப்பை நிறுத்து ஒப்பந்தக்காரர் கொண்டுவரும் சாக்குகளில் நிறுத்துவிடுவர்.

3. உப்பு ஈரமாயிருந்தால் அந்தர் நிறை திருக்கோணமலே உதவி இராஜகாரியஸ்தரது கருத்துப்படி 113 றுத்தல் தொடக்கம் 116 இறுத்தலாகக் கணக்கிடப்படும்.

4. ஐயாயிர அந்தருக்குக் குறைய ஏற்றுமதிசெய்யும்படி ஒருபோதும் ஒப்பந்தக்காரன் கேட்கப்படமாட்டார். உதவி இராஜகாரியஸ்தரது அறிவித்தல் ஒப்பந்தக்காரரது திருக்கோணமலே விலாசத்தில் கிடைத்த ஒரு கிழமையில் ஏற்றுமதி ஆரம்பித்தல் வேண்டும். ஒப்பந்தக்காரரது திருக்கோணமலே விலாசம் இவ்வொப்பத்தின் எவ்வறிவித்தலும் கொடுக்க ஏற்க போதியதாக விருக்கும்.

5. நிறுவை குதச்சேர்வை உட்பட அந்தர் ஒன்றுக்கு ஒப்பந்த விகிதம் இன்னதென்று காட்டல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காறன் நாளாந்தம் (a) வகையில் 300 அந்தருக்குக் குறையாததும், (b) (c) வகைகளில் முறையே 250 அந்தருக்குக் குறையாததும் உப்பு ஏற்றுமதி செய்தல் வேண்டும்.

7. ஒப்பந்த பத்திரத்தைக்கொண்ட உறையின் இடப்பக்க மேல்மூலேயில் "உப்பு ஏற்றுமதிசெய்தற்கு ஒப்பந்தம்" என்று எழுதி அப்பத்திரத்தை 1922 ம் ஞு கார்த்திகை மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் திருக்கோணமலே உதவி இராஜகாரியஸ்தர் கந்தோரில் கிடைக்கத்தக்கதாய் அனுப்பல் வேண்டும். 1 (a), 1 (b), 1 (c), 2 (a), 2 (b), 2 (c) என்பவற்றினுக்கு வேறு வேறு விகிதங்கள் குறிக்கப்படல்வேண்டும்.

8. திருக்கோணமலேக் கச்சேரியில் கேட்டுப் பெறும் அச்சுபிரதிகளிலேயே ஒப்பந்தம் எழுதல் வேண்டும். அப்படி எழுதியனுப்பப்படாத ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

9. திருக்கோணமலேக் கச்சேரியில் ரூபா ஐம்பது (ரூபா 50) கட்டிய பற்றுச்சீட்டுக் காட்டி ஒப்பந்த அச்சுப்பிரதிகள் பெற்று கொள்ளல் வேண்டும். யாதொரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் உதவி இராஜகாரியஸ்தர் அல்லது அவரது தத்துவம்பெற்ற பிரதிகாரியஸ்தர் எழுதிய அறிவித்தல் கிடைத்த ஏழுநாளில் ஒப்பந்த உடன்படிக்கை நிறைவேற்றவுந் தகுந்த பிணை கொடுக்கவும் எவரும் தவறினுல் மேற்சொல்லியபடி கட்டிய தொகையை இழந்துவிடுவதுமன்றி அப்படித் தவறியவர் அரசாட்சி ஒப்பந்தங்கள் எவற்றினும் எக்காலத்தினும் சேராதபடி தவறியவர் தாம் அட்டவணையில் அவருடைய பெயர் எழுதப்பட நேரிடும். ஒப்பந்தம் கையொப்பமிட்டபின் கட்டிய ரூபா 50 கொடுக்கப்படும்.

10. ஒப்பந்தப்படி ஏற்பாட்டை நிறைவேற்றற்குப் பிணைப்பட உடன்படும் இரண்டு தகுந்த ஆட்களது கையொப்பமும் விலாசமுமிட்ட கடிதம் ஒன்று ஒவ்வொரு ஒப்பந்த பத்திரத்தோடும் அணைக்கப்படல் வேண்டும்.

11. ஒப்பந்த ஏற்பாட்டை சரிவர நிறைவேற்றப் பிறப்பிக்கப்படும் சீட்டில் போதிய பிணைகாரர் கையொப்பமிடல் வேண்டும். சீட்டின் தொகையும் வேறு பிற விபரங்களும் திருக்கோணமலேக் கச்சேரியில் கேட்டு அறியலாம்.

12. திருக்கோணமலே உதவி இராஜகாரியஸ்தருக்கு ஒப்பந்த மூலப்பிரதி அனுப்பிய திகதியிலேயே கொழும்பு கௌரவ அரசிறை நிருவாகரவர்கட்கு இணைப்பிரதி தபால் மார்க்கமாயனுப்பப்படல் வேண்டும்.

13. மேற்குறித்த நிபந்தனைகள் யாவும் யதார்த்தமாய் நிறைவுற்றுலன்றி ஒப்பந்தப் பத்திரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

14. யாதும் ஆட்சேபமின்றி ஒப்பந்த பத்திரங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடும் உரித்தையும் ஒப்பந்தத்தில் ஓர் பகுதியை ஏற்கும் உரித்தையும் அரசாட்சியார் உடையர்.

ஆர். எம். எம். வோர்ஸ்லி,
உதவி இராஜகாரியஸ்தருக்காக.

திருக்கோணமலேச் கச்சேரி,
1922 ம் ஞு ஐப்பசிமீ 2 ந உ.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.